விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 351 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (05.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வடக்குக் கிழக்கில் பொலிஸாரின் அராஜகத்துக்கு முடிவு கட்டுங்கள்

## ஜனாதிபதியிடம் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“பொலிஸார் தாம் நினைத்த மாதிரி செயற்படலாம் என்ற மனோநிலை 15

## நாட்டைச் சீரழித்த ராஜபக்ஷக்கள்

# பாராளுமன்றம் வர இடமளிக்கக்கூடாது

## பொதுமக்களிடம் சந்திரிகா வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டைச் சீரழித்த ராஜபக்ஷக்கள் கும்பல் மீண்டும் பாராளுமன்றம் வருவதற்கு மக்கள் எவரும் இடமளிக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 2203 டெங்கு நோயாளர்கள்

# யாழில் இந்த வருடம் இனங் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்டத்தில் இந்த வருடத்தின் இறுதி வரையான காலப்பகுதியில் 2203 நோயாளிகள் இனங்காணப்பட்டதுடன் இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள 15

## தாய்ப்பால் புரைக்கேறியதில்

# 26 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு

(கரணவாய்)

தாய்ப்பால் புரைக்கேறியதில் பிறந்து 26 நாட்களேயான பச்சிளம் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 15

## பிரதான சாட்சி சமுகமளிக்காததால்

# அடையாள அணிவகுப்பு 8ஆம் திகதிக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த வட்டுக்கோட்டை இளைஞனின் வழக்கு விசாரணையின் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 08ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப் பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த 15

# தெல்லிப்பழையில் வாள்வெட்டு; பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் வாள் வெட்டுக் குழுவினர் நேற்று வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரும் வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

தெல்லிப்பழை பகுதியில் ஹயஸ் ரக வானில்வந்த அடையாளம் தெரியாத குழுவொன்று மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் சிலர் தெல்லிப்பழை பகுதி 15

## சிறுவர் நன்னடத்தை நிலையத்தில்

# 14 வயது சிறுவன் அடித்துப் படுகொலை

## மட்டக்களப்பில் சவப் பெட்டியுடன் போராட்டம் நடத்திய மக்கள்

07ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சி



(கொழும்பு)

2022 ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் இலங்கையின் ஏற்றுமதி 14.6% ஆல் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது 898.0 மில்லி 15

# வழிப்பறிக் கொள்ளை யாழில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வழிப்பறிக் கொள்ளை அதிகரித்துள்ளதாகப் பலரும் முறையிட்டுள்ளனர்.

பொதுவில் இரவு வேளைகளில் வீதியால் செல்பவர்களைத் திடீரென இடைமறித்து தாங்கள் புலனாய்வுத்துறை என்றும் உங்களிடம் போதைப்பொருள் இருக்கிறதா? என்று சோதனையிடப் போவதாகவும் கூறி வழிப்பறிக்கொள்ளை 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்து சக்கரங்களுக்குள் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொல்கஹவெல பகுதியில் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட ஒருவர் பேருந்தின் சக்கரங்களுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அலவ்வவில் இருந்து குருணாகல் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் பயணித்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பேருந்து சக்கரங்களுக்குள் சிக்கி பலத்த காயமடைந்தவரை பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் பொல்கஹவெல கந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்கஹவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7)

# ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு ரூ.10 ஆயிரம் கொடுப்பனவு வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்திற்குள் பாடத்திட்டத்தை கற்பித்து முடிக்க வேண்டும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இம்மாதம் பாடசாலை விடுமுறை முடிந்து பெப்ரவரி 2 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் புத்தாண்டு தொடர்பான பாடசாலை தவணை பெப்ரவரி19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் கல்வி முக்கியம் என்பதால், எத்தனை சவால்கள் இருந்தாலும் அடுத்த ஆண்டு பாடப்புத்தகங்களுக்கு 1,020,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சீருடைகளுக்கு 6,500 மில்லியன் ஒதுக்கப்பட்டது. காலணிகளுக்கு 2,200 மில்லியன் மதிய உணவிற்கு 16,000 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

இதேவேளை, ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் எதிர்வரும் ஜனவரிமாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் விவசாயக் கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி **தணிகைவேல் ஜெனாதனா** அவர்களுடைய
அன்புத் தந்தையார்

(C-7800)



அமரர்

## முருகேசு சுப்பிரமணியம்

அவர்கள் கடந்த 02.12.2023 அன்று
காலமாகிவிட்டார் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தோற்றம் : 30.07.1936**
**மறைவு : 02.12.2023**

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர்நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# மின் நுகர்வோர்

# 7 இலட்சம் பேருக்கு சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

முறையாக மின்கட்டணம் செலுத்தாத 7 இலட்சம் மின் நுகர்வோருக்கு மின்சார வாரியம் சிவப்பு அறிவித்தல் அனுப்பியுள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 70 இலட்சம் பேர் மின் நுகர்வோர்கள் மற்றும் மொத்த மின் நுகர்வோரில் 10% பேருக்கு சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல தடவைகள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியதன் பின்னணியிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்த மின் நுகர்வோரில் 65 இலட்சம் பேர் மட்டுமே திட்டமிட்டபடி கட்டணத்தை செலுத்தவில்லை என்றும் இலங்கை மின்சார சபை கூறுகிறது.

எனினும், நிலுவையில் உள்ள மின் கட்டணத்தை செலுத்த 45 நாட்கள் அவகாசம் வழங்கவும் மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ம-7)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 06 . 02 . 1959

விண்ணில் 07 . 11 . 2020

## அமரர் திருமதி லின்ரா சந்திரலிங்கம்

திதி : அபரபக்க அட்டமி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
ஆண்டுகள் மூன்றென்ன
முன்னூறு கடந்தாலும்
உங்கள் அன்பு முகம்
எங்கள் மனங்களில் நீங்காது

பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய்.

(18099)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன்
காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7808)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **நிலானி தினேஷ்**
அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

## தம்பிராஜா கதிர்காமநாதன்

**தோற்றம் : 22.11.1950**
**மறைவு : 01.12.2023**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(18102)

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பின் சுயாதீனத்தை மாற்ற ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

## ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

**அரசியலமைப்பு சபையின் சுயாதீனத்தை சவால் செய்ய ஜனாதிபதிக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



தற்போது ஆணைக்குழுக்கள் பெயரளவிலேயே சுயாதீன ஆணைக்குழுக்களாக காணப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயர் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதில் அரசியல் சபைக்கு முக்கிய பங்கு இருந்தாலும் அது தற்போது நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் இருப்பதாக ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கும் அரசியலமைப்பு சபைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்க முயற்சிப்பது சட்டவிரோதமானது எனவும் தெரிவித்துள்ளார். (5-6)

# விழிப்புலன் அற்றோர்களுக்கு விசேட வாக்குச்சீட்டு விநியோகம்

## தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் விழிப்புலன் அற்றவர்கள் வாக்களிப்பதற்காக விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் விழிப்புலன் அற்ற வாக்காளர்களுக்காக தேசிய ரீதியில் நடைபெறும் அடுத்த தேர்தலில் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் தொட்டுணரக்கூடிய விசேட வாக்குச்சீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

இது குறித்த முன்னோடித் திட்டமாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 10 வாக்களிப்பு நிலையங்களில் இத்திட்டம் வெற்றியளித்துள்ளது.

அதேவேளை செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினரின் தேவைகள் மற்றும் இயலாமையுடைய நபர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லக் கூடிய வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

அத்துடன், இயலாமையுடைய நபர்களுக்கு விசேட அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (5-6)

# பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவி தொடர்பில் அரசு கவனம்

(கொழும்பு)

பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவியொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவி என்பது ஜனாதிபதியால் நிறுவப்படும் ஒரு சிவில் பதவியாகும்.

ஆனால் ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்படும் நபருக்கு, பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகத்தை கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படவுள்ளது.

அதன்படி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது,பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த பதவி 3 மாதங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. (5-6)

# நெருக்கடியான நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில்

## பொதுஜன பெரமுன

(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த பெருந்தலைவராகவே நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்கின்றோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கச் சிலர் சதித்திட்டம் தீட்டுகின்றனர்.

வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அரசும் கவிழும். அந்த நிலைமை ஏற்பட மொட்டுக் கட்சி இடமளிக்காது.

மேலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (5-6)

# இலங்கை மாணவர்களுக்கு ஜப்பானில் தொழில்பயிற்சி

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழகங்களில் விவசாயம் தொடர்பில் கற்கும் மாணவர்களுக்கு ஜப்பானில் உள்ள மூன்று உயர் கல்வி நிறுவனங்களில் தொழில் பயிற்சியை வழங்க ஜப்பானின் ஆசிய மனிதவள வங்கி இணங்கியுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயத்திற்கு மாத்திரமன்றி பெருந்தோட்ட பயிர்களை கற்கும் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த ஒரு வருட கால பயிற்சியின் பொது ஊதியம், உணவு மற்றும் தங்கும் வசதிகள் மற்றும் விமான பயணச்சீட்டுக்களை இலவசமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜப்பானிய மொழியில் மேம்பட்ட பயிற்சிகள் மற்றும் ஜப்பானிய தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதாகவும் ஜப்பானிய பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (5-6)

# மின்னல் தாக்கி விவசாயி பலி

(கொழும்பு)

கலேவெல பிரதேசத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை புலகல பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஏ. சோமதிலாவில் 60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்துடன் வயலில் விதை விதைத்துக் கொண்டிருந்த போது மின்னல் தாக்கி தூக்கி வீசப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)

# சிசுவை கொலை செய்த இலங்கைப் பணிப்பெண் கைது

(மாலே)

மாலைதீவில், சிசுவொன்றை கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவர் அந்த நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ரகசியமாக சிசுவொன்றை பிரசவித்து அந்த சிசுவை பையொன்றினுள் இட்டு கைவிட்டுச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாலைதீவு பொலிஸாரினால் மீட்டிருந்த சிசுவை பரிசோதித்த மருத்துவர்கள் குறித்த சிசு உயிரிழந்திருந்ததை உறுதிசெய்துள்ளனர்.

இந்தநிலையில், சந்தேக நபரான குறித்த பெண், இலங்கைக்கு தப்பிச் செல்ல முற்பட்ட போது மாலைதீவு விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (5-6)

# டெங்கு நோயாளர்கள் 77,487 பேர் அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 77,487 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 46 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவின் விசேட பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் உறுதியானவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலிருந்து இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகள் விற்பனை

## இருவர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 38 வயதுடையவர்கள் எனவும் அவர்களிடமிருந்து சுமார் 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## றொனால்டோ மீது இழப்பீட்டு வழக்கு

உலகின் மிகப்பெரிய நிறுவனமான கிரிப்டோ பைனான்ஸ் காற்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ றொனால்டோ மீது இழப்பீடு கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த வழக்கில், றொனால்டோ விளம்பரம் செய்துள்ளமையால் நம்பிக்கையுடன் முதலீடு செய்த நிலையில், தற்போது பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.(5-6)



## மன்னார் பிரீமியர் லீக் அயிலன் FC அணி வெற்றி

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் அயிலன் FC அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.





மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் மாவட்டத்தில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்த குறித்த லீக் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

லீக் முறையில் போட்டிகள் இடம் பெற்று புள்ளி அடிப்படையில் 4 அணிகள் 2 ஆம் சுற்றுக்கு தெரிவானது. இறுதிப் போட்டியில் ஏ.கே.ஆர். FC அணியும் அயிலன் FC அணியும் மோதின.

இதன் போது அயிலன் FC அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

முதல் நிலையை பெற்றுக்கொண்ட அணிக்கு 10 லட்சம் ரூபாவும் 2 ஆவது இடத்தை பெற்றுக் கொண்ட அணிக்கு 5 லட்சம் ரூபாவும் பணப் பரிசிலாக வழங்கி வைக்கப்பட்டது. (5-6-285)

## அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா




அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது இந்தியா. இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான கடைசி இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இந்திய அணி ஷ்ரேயாஸ் ஐயரின் அரை சதத்தால் 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ரன்கள் எடுத்தது.

அவுஸ்திரேலியா அணி தரப்பில் ஜேசன் பெஹ்ரன்டோர்ஃப், பென்துவர்பிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலியா அணியின் தொடக்கம் சிறப்பாக இருந்தாலும் சீரான இடைவெளியில் ஹெட் 28, பிலிப் 4, ஆரோன் ஹார்டி 6, டிம் டேவிட் 17, மேத்யூ ஷார்ட் 16, ஆகியோர் விக்கெட்டுக்களை இழந்தனர்.

ஒரு முனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பென்மெக்டெர்மாட் அரைசதம் விளாசினார். கடைசி வரை போராடிய மேத்யூவேட் 22 ரன்னில் அவுட் ஆனார்.


இறுதியில் 8 விக்கெட்டுகளை இழந்து 154 ரன்கள் மட்டுமே எடுத்து அவுஸ்திரேலியா தோல்வியடைந்தது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரை 4-1 என்ற கணக்கில் இந்தியா தொடரை கைப்பற்றியது. (5-6)

## டென்னிஸ் களத்திற்கு திரும்பும் ரபேல் நடால்

22 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினை சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் ஏறக்குறைய 1 ஆண்டுக்கு பின் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்ப உள்ளார்.

காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற எந்தவித டென்னிஸ் தொடரிலும் பங்கேற்காத நிலையில், குணமடைந்த பிறகு மீண்டும் களத்திற்கு திரும்ப உள்ளார்.



அதன்படி நடால் டிசெம்பர் 31 முதல் ஜனவரி 7 ஆம் திகதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத அஸ்வெசும கொடுப்பனவுகள் இன்றுமுதல்

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அஸ்வெசும கொடுப்பனவினை பெற தகுதியுடைய 14 இலட்சத்து 6,932 குடும்பங்களுக்கான கொடுப்பனவு இவ்வாறு வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட இலங்கையர்களுக்கு வழங்கப்படும்அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவின் ஒக்டோபர் மாதத்திற்கான கொடுப்பனவு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதன்படி, 8,775 மில்லியன் ரூபாய் கொடுப்பனவு வங்கிகளில் வைப்பலிடப்பட்டுள்ளது.

இந்த கொடுப்பனவுகள் இன்று முதல் பயனாளிகளின் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலித்து தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு எதிர்காலத்தில் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (5-6)

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்

## கல்வி அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் பாடசாலை விடுமுறை முடிவதற்குள் தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்டசபை உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு காரணமாக 25,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணி நியமனம் 9 மாதங்களாக தாமதமாகி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



விடுமுறைக் காலம் முடிவதற்குள் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பழைய ஆசிரியர்களின் ஏற்றத்தாழ்வுக்கு மாகாண மட்டத்தில் தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், டிசெம்பர் மாத இறுதிக்குள் மாகாண கல்வி அமைச்சர்கள், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள், தொழிற்சங்கங்கள் இணைந்து இரண்டு நாள் செயலமர்வை நடத்தி கல்வி நிர்வாகத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# 5 இலட்சம் பாவனையாளர்களது மின் இணைப்புக்கள் துண்டிப்பு

(கொழும்பு)



நாட்டில் ஐந்து இலட்சம் வாடிக்கையாளர்களது மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணத்தை செலுத்தாத காரணத்தினால் கடந்த சில தினங்களில் இவ்வாறு ஐந்து இலட்சம் வாடிக்கையாளர்களது மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், சுமார் ஐந்து இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை மின் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.


அசாதாரணமான முறையில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டமை மூலம் தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை.

நீர்மின் உற்பத்தி மூலம் பாரிய அளவு லாபத்தை இலங்கை மின்சார சபை ஈட்டுகிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது நியாயமற்றது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (நி-6)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு சு.யோகேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை



அமரர். மயில்வாகனம்
சண்முகநாதன்

அவர்கள் (01.12.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்
அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும்
அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.

(18100)

# இராசிபலன்

05.12.2023
கார்த்திகை 19, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 12.15 மணிவரை
பூரம் பின்னிரவு 3.43 மணிவரை

சுபநேரம் -10.46-12.16மணிவரை
இராகுகாலம்-3.16-4.46 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம்

வளவன்



மேஷம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



கடகம்

தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



துலாம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.



ரிஷபம்

பணிபுரியும் இடத்தில் பெயருமள்ள புகழும் கூடும், வாகன சுகத்தால் வளம் காணும் நாள், சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.



சிம்மம்

மனக் குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.




விருச்சிகம்

பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், போசன சுகமுண்டு.




கும்பம்

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.




மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகலாம்,பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




கன்னி

அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயம் பெறுவீர்கள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.



தனுசு

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.



மீனம்

அலுவலகப் பணிகள் துரிதமாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

மனத்தூய்மையே நேர்மை மற்றவையெல்லாம் வெறும் கூச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட நடைபவனி



(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுக நல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடைபவனி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இணைந்த சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி. சபா ஆனந்த் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்த இந்த நடைபவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, மருத்துவமனை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (5-6-33)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் சமையலாளர், கணனி படவடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழினுட்பவியலாளர், அலுமினயம் பொருத்துநர், கணனி பட வரைஞர், கட்டட நிர்மாணவியலாளர் ஆகிய குறித்த கற்கை நெறிகளிற்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கல்வித்தகமை க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் அத்துடன் தொழில்சார் தகைமை மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம்.

அல்லது சம்மந்தப்பட்ட துறை யில் NVQ-4 உடன் குறைந்தது 2 வருடம் கற்பித்தல் அனுபவம்.

அல்லது சம்மந்தப்பட்ட துறையில் ஒரு வருட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் முழு நேர டிப்ளோமா சான்றிதழ் 1 வருடம் கற்பித்தல் அனுபவம். அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டச் சான்றிதழ் 1 ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம் மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழிற்துறை அனுபவ தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி, தொழிற்கல்வி, அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 8.12. 2023 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ முடியும் என யாழ்.இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உத விப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5-6)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவாரத் திருக்கோயில் வேம்படிப் பிள்ளையார் கோவில் மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.10 முதல் 8.20 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (5-6)

## திருவுருவச்சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)
சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரனின் முதலாம் ஆண்டு நிறைவு அஞ்சலியும் திருவுருவச்சிலை திறப்பு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு கரவெட்டி, கரணவாய் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் ஓய்வுநிலை ஆசிரியர் இ.கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளன. (5-6)

## நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 59 ஆவது நினைவு தின நிகழ்வு இன்று மு.ப 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்க மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையின் உப தலைவர் க.மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (5-6)




# சர்வதேச மனக்கணிதப் போட்டி
## யாழ். மாணவன் சம்பியனாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)
Ucmas சர்வதேச மனக்கணிதப் போட்டியில் யாழைச் சேர்ந்த வி.ருஷாந்தன் C பிரிவில் சம்பியன் ஆனார்.

சர்வதேச மனக்கணிதப் போட்டி மலேசியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் உலக அரங்கில் 80 இற்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 60 மாணவர்கள் பங்குபற்றியுள்ள நிலையில் யாழ்ப்பாண கிளையைச் சேர்ந்த மாணவன் வி.ருஷாந்தன் C பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு



திருநெல்வேலி சென்றரை சேர்ந்த சுதர்சன் அருனன், றஜிப் வைசாளி, A பிரிவில் இரண்டாம் இட த்தையும் யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி 20மாணவர்கள் A,B,C, D,E,F மூன்றாம் இடத்தையும் சர்வதேச ரீதியில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தேசியமட்ட இசை, நடனப் போட்டி
## இராமநாதன் கல்லூரி முதலிடம்



(யாழ்ப்பாணம்)
தேசிய மட்ட இசை, நடனப் போட்டிகளில் யாழ்.இராமநாதன் கல்லூரிமாணவிகள் 1ஆம் இடத்தினை பெற்றுள்ளனர்.

அநுராதபுரத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை சங்கீத, நடனப்போட்டியில் யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் தனி இசை, குழு நடனத்தில் 1 ஆம் இடத்தினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்.

இலங்கை திறந்த பல்கலை கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் குறித்த 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண் ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 14.12.2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற யாழ்ப்பாண பிராந்திய நிலையாத்துடன் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள முடியும். (நி-6)

(யாழ்ப்பாணம்)
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் முழு நேர கற்கைநெறிகளை நாளை சனிக்கிழமை அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடி பானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியலாளர் (AQS) போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 13.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12/4 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற் பயிற்சி நிலை யங்களிலும் மேற் கொள்ள முடியும். அல்லது விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 021 2211793, 021 2057 047, 021 226 2550, 071 031 8737, 077 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு- மும்பை இடையே இரட்டை விமான சேவை அறிமுகம்

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கொழும்பு மற்றும் மும்பை இடையே தினசரி இரட்டை விமான சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி கொழும்பு மற்றும் மும்பைக்கு இடையில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை 50 வீதமாக அதிகரிக்கும் என விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

மும்பையிலிருந்து வரும் பயணிகள் கொழும்பில் இருந்து சிங்கப்பூர், கோலாலம்பூர், பாங்கொக், லண்டன், பிராங் பேர்ட், பாரிஸ், மெல்போர்ன் மற்றும் சிட்னி போன்ற இடங்களுக்குச் செல்லவும் இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது. (5-6)

# மோட்டார்சைக்கிள்- கார் நேருக்குநேர் மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்



(திருமலை)

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64 ஆம் கட்டை மலையடி பகுதியில் மோட்டார் சைக்கிளும் காரொன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து மூதூர் தள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6)

# மட்டக்களப்பில் சவப்பெட்டியுடன் போராட்டம் நடத்திய மக்கள்



(மட்டக்களப்பு)

கல்முனையிலுள்ள சிறுவர் நன்னடத்தை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவனொருவன் பெண் பராமரிப்பாளர் தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு - கொக்குவில் பகுதியை சேர்ந்த 14 வயதான சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை குறித்த சிறுவனின் பிரேதப் பெட்டியுடன் ஊர்வலமாக வந்த மக்கள் கொக்குவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பிரேதப் பெட்டியை வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது "பொலிஸார் முறையான பாதுகாப்பு வழங்காதமையே சிறுவன் உயிரிழந்தமைக்குக் காரணம்" என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்திருந்தனர். (5-6)

# 3 மாணவிகள் மருத்துவமனையில் அனுமதி

(கொழும்பு)

ஹந்தான மலைப் பகுதியில் காணாமல் போயிருந்த நிலையில் மீட்கப்பட்ட ராகம மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்களில் மூன்று பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் குளிர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாணவிகள் மூவரே கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் மேலும் குறித்த மலைத் தொடரில் சிக்கியிருந்த 180 மாணவர்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம்



(கொழும்பு)

பல கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பினர் நடத்திய போராட்டத்தை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மக்கள் மீதான வரிச்சுமை மற்றும் நாட்டில் நிலவும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்ற வீதியூடாக பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்ட போது கலகத் தடுப்பு பொலிஸாரால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (5-6)

# மின்சார சபைக்கு செலுத்தப்படாமல் ரூ.16 மில்லியன் கட்டணம் நிலுவை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு வழங்கப்பட்ட 74 மின் இணைப்புகளில் இருந்து 16 மில்லியன் ரூபாய் மின்கட்டணம் இலங்கை மின்சார சபைக்கு இன்னும் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது.

2022 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்காய்வு அறிக்கை மூலம் குறித்த தகவல் தெரியவந்துள்ளது.

குறித்த அறிக்கையின்படி, 29 மின் இணைப்புகளில் இருந்து 5 மில்லியன் ரூபாய் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதுடன். மேலும் 30 மின் இணைப்புகளில் இருந்து 3 மில்லியன் ரூபாய் ஒரு வருடத்துக்கும் மேலாக செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)


## தங்கம்மா முதியோர் இல்லம் புதுக்குளம், கனகராயன் குளம்

அலுவலக உதவியாளர் தேவை

தகுதி- 01. கா.பொ.உ.த படித்ததாக இருத்தல் வேண்டும்.
02. அடிப்படை கணனியில் அறிவு இருத்தல் வேண்டும்.
03. தொலைபேசி தொடர்புகள், நேரடித் தொடர்புகள் என்பன அவசியம்.
04. அடிப்படை நிர்வாகத் திறமை இருத்தல் வேண்டும்.
05 நல்ல தமிழ் அறிவும், ஆங்கில அறிவும் இருத்தல் வேண்டும்.
06. நல்ல நேர்மை உள்ளவராகவும், சட்ட திட்டங்களை மதிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
07. 20 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்ட திருமணமாகாத பெண்மணியாக இருத்தல் வேண்டும்.
08. முதியோர் இல்லத்தில் தங்கி வேலை பார்க்க வேண்டும்.

- இவ் இல்லம் பதிவு செய்யப்பட்ட இலவச சேவை செய்யும் நிறுவனமாகும்.
- உரிய சம்பளம் வழங்கப்படும்.
- நல்ல வசதியான அலுவலகம் வழங்கப்படும்.
- தங்குவதற்கு பாதுகாப்பான இடம் வழங்கப்படும்.
- சாப்பாடு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு Dr.குணசிங்கம் 076 248 2766


## சாவகச்சேரி பிரதேசசபை

### ஆதனவரி செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கைதடி மற்றும் நாவற்குழி பிரதேசங்களில் அசைவற்ற ஆதனங்களை கொண்டிருப்பவர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் குறித்த ஆதனங்களுக்குரிய இவ் ஆண்டுக்கான (2023) ஆதனவரி மற்றும் நிலுவைத் தொகையினை பிரதேசசபையின் தங்கள் பிரிவுக்குட்பட்ட குறித்த இரு உப அலுவலகங்களில் 09.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். சபையின் ஆதனவரி செயற்பாடுகளை கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் 10.12.2023 ஆம் திகதி முதல் 31.12.2023ஆம் திகதி வரை ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத் தருகின்றேன்..

கதிர்காமநாதன் சந்திரகுமார் செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம். 05.12.2023.

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை

### வரைபு வரவு-செலவுத் திட்டம்-2024

"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கு அமைவாக, வலிகாமம் கிழக்கு பிரதேசசபையினால் வட்டார ரீதியாக நடாத்தப்பட்ட பொதுமக்கள் கலந்துரையாடல்களின் முன்மொழிவுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட வரைபினை தலைமை அலுவலகத்திலும், அச்சுவேலி புத்தூர். நீர்வேலி. கோப்பாய். உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களிலும் உப அலுவலக பொது நூலகங்களிலும் 2023.12.05 இருந்து 2023.12.18 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்."

செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை.புத்தூர். 05.12.2023.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உலக நாடுகளை அச்சுறுத்திவரும் சீனாவின் புதிய நிமோனியா வைரஸ்




(பீஜிங்)

வடசீனாவில் கண்டறியப்பட்ட புதிய நிமோனியா வைரஸ் தொற்று அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகள் தற்போது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பிராந்தியங்களில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த தொற்றானது வடக்கு சீனாவில் உள்ள குழந்தைகளிடையே அதிகமாகப் பதிவாகியுள்ள நிலையில் அங்குள்ள மருத்துவமனைகள், நோயாளிகளால் நிரம்பி வழிகிறதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதன்படி கனடா, இத்தாலி மற்றும் ருமேனியாவில் இருந்தும் அந்த வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளுடன் சிலர் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சீனாவில் இருந்து வரும் பயணிகளுக்கான விமான நிலைய சோதனைகளை கடுமையாக்க தாய்வான் சமீபத்தில் முடிவு செய்திருந்தது.

தாய்வான் அரசின் இந்த முடிவால் கடந்த நவம்பர் மாதம் முதல் 30 சீனப் பயணிகளுக்கு நிமோனியா நோய் இருப்பது கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## மராபி எரிமலை வெடிப்பு 11 பேர் பலி, 12 பேர் மாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ராவில் உள்ள மராபி எரிமலை வெடித்ததைத் தொடர்ந்து மலையேற்றத்தில் ஈடுபட்ட 11 பேர் உயிரிழந்ததோடு 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

மலையேற்றத்தில் 75 பேர் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் உயிரிழந்த 11 பேரின் உடல்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதாகவும் 12 பேர் மாயமாகியுள்ளதாகவும் ஏனையோர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும்அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களை தேடும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

2,891 மீற்றர் (9,485 அடி) உயரமுள்ள எரிமலை நேற்று முன்தினம் வெடித்த நிலையில் 3 கி.மீ உயரம் வரை சாம்பலை உமிழ்ந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (5-6)

## போர் இடை நி...

## கத்தாருடன் இ...

## கமலா ஹா...

(வோஷிங்டன்)

**இஸ்ரேல்-ஹமாஸ் போர் மீண்டும் தீவிர... நிலையில் ஏதேனும் ஒரு உறுதியான வழி... போரினை இடைநிறுத்தம் செய்வதற்கு கத்த... காவும் இணைந்து பணியாற்றும் என அ... ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளா...**



ஒரு வார போர் இடைநிறுத்தத்திற்கு இஸ்ரேல் சம்மதித்தது. இஸ்ரேல் வசம் உள்ள பாலஸ்தீன கைதிகளையும், ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளையும் பரஸ்பரம் இரு தரப்பினரும் விடுவித்தனர்.

ஆனால் இஸ்ரேலிலிருந்து கடந்த ஒக்டோபர் 7 அன்று கொண்டு செல்லப்பட்ட பணயக்கைதிகள் அனைவரும் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை.

ஹமாஸ் அமைப்பினர் பலவ... சென்ற... கைதி... வேண்... கையி... வாங்க... கள் ம... ஹமா... ஒப்பு ... வாங்கி... குற்றம்...

இத... இடை... வெள்... முடிவு... இதை ... மீண்டு... ங்கி உ...

மீ... போரி... காசா ...

## தமிழகத்தை தாக்கி வரும் மிக்ஜாம் சூறாவளி



(டில்லி)

தமிழகத்தை சூழ்ந்த மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை உள்ளிட்ட பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையில் இருந்து, 150 கி.மீ தொலைவில் கிழக்கு - தென்கிழக்கில் மிக்ஜாம் புயல் மையம் கொண்டிருந்த காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் அதிக அளவிலான கனமழை மற்றும் அதிக வேகத்தில் காற்று வீசியதால் வெள்ள அபாய நிலை ஏற்பட்டது.

பேருந்து தரிப்பிடங்கள், சாலைகள் மற்றும் சென்னை விமான நிலையம் உள்ளிட்டவை வெள்ள நீரால் நிறைந்துள்ளன.

இதன் காரணமாக சென்னையில் புறநகர் தொடருந்து சேவைகள் இரத்து செய்யபட்டுள்ளது. அதற்குப்பதிலாக மணித்தியாலத்திற்கு ஒரு முறை என சிறப்பு தொடருந்து சேவை முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், புயல் காரணமாக தமிழகம் முழுவதும் இதுவரை 120 இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதாகவும் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து வீசும் பலத்த காற்றுக் காரணமாக மரங்கள் ஆங்காங்கே முறிந்து விழுந்துள்ளதனால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இந்நிலையில், வேளச்சேரியில் அடுக்குமாடி கட்டடம் ஒன்று தரையில் இறங்கியதால், பலர் சிக்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியிருந்த நிலையில், விபத்து ஏற்பட்ட இடத்திற்கு தீயணைப்புப்படை வீரர்கள் சென்று இருவரை மீட்டுள்ளதுடன் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

## உக்ரைன் முன்...

## விதிக்கப்...



(கீவ்)

உக்ரைன்-ரஷ்யா போர் நடைபெற்று வரும் நிலையில், உக்ரைன் முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடிவு செய்த நிலையில் வெளியேறுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த சுற்றுப்பயணத்தின் போது அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் மைக் ஜான்சனை சந்திக்கவும், போலந்து பாராளுமன்றத்திற்கு செல்லவும் திட்டமிட்டிருந்தார்.

அ... பிரதம... சந்தி... கவும்... னது... ஹ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு



# . நிறுத்த முயற்சியில்
# இணைந்த அமெரிக்கா
## ாரிஸ்

**தீவிரமடைந்துவரும் வழிகளில் மீண்டும் த்தாருடன் அமெரிக் அமெரிக்க துணை ள்ளார்.**



பலவந்தமாக கொண்டு சென்ற இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் கோரிக் கையில் இஸ்ரேல் பின் வாங்க மறுத்தது. பெண் கள் மற்றும் குழந்தைகளை ஹமாஸ் விடுவிக்க முதலில் ஒப்பு கொண்டு பிறகு பின் வாங்கி விட்டதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

இதனால் இந்த போர் இடைநிறுத்தத்தை கடந்த வெள்ளியன்று இஸ்ரேல் முடிவுக்கு கொண்டு வந்தது. இதை தொடர்ந்து. இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொட ங்கி உள்ளது.

மீண்டும் தொடங்கிய போரில் 24 மணி நேரத்தில் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரையும் இஸ்லாமிய ஜிஹாத் எனும் அமைப்பின ரையும் குறிவைத்து 400இற்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய இரா ணுவ படை அறிவித்தது.


ஆண்களை விடுவிக்க வேறு விதமான நிபந்தனைகளை ஹமாஸ் முன்வைத்ததாகவும், ஆனால் பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுவிக்காத வரை எந்தவித பேச்சு வார்த் தைக்கும் ஒப்பு கொள்ள முடியாது என இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கத்தார் முன்னெடுத்த போர் இடைநிறுத்த முயற்சிகள் தோல் வியடைந்ததால், அங்கு பேச்சு வார்த்தைக்காக சென்றிருந்த இஸ்ரேல் நாட்டின் மொஸாட் உளவு (Mossad Intelli gence) அமைப்பினரை இஸ் ரேல் திரும்ப அழைத்து கொண் டுள்ளது.

காசா பகுதியில் மனிதா பிமான உதவிகள் தொடர்ந்து கிடைக்கவும், ஹமாஸ் வசம் உள்ள பணயக்கைதிகள் அனை வரும் பத்திரமாக மீட்கப்படவும் அதே சமயம் அப்பாவி பாலஸ் தீனர்கள் உயிரிழப்பதை தடுக்க வும் ஒரு வழிமுறையை ஆலோ சித்து வருகிறோம்.

என அமெரிக்காவின் நிலை குறித்து அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரி வித்துள்ளார். (5-6)

# போர் நிறுத்த முடிவு பேரழிவை ஏற்படுத்தும்
## போப் பிரான்சிஸ்



(வோஷிங்டன்)

தற்காலிகப் போர் நிறுத் தம் முடிவுக்கு வந்தது மிகு ந்த வருத்தமளிப்பதாக போப் பிரான்சிஸ் தெரிவித்துள் ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,


"தற்போது நடந்து வரும் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே யான போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

காசாவில் நடந்துவரும் தாக்குதல்களும் மக்கள் படும் துயரும் என்னை துன் பத்தில் ஆழ்த்தியுள்ளது.

போர் நிறுத்தம் முடிவு க்கு வந்தது பெரும் அழிவுக ளையும் உயிரிழப்புகளை யும் தரப்போகின்றது." என்று தெரிவித்திருந்தார்.

86 வயது நிரம்பியுள்ள போப் பிரான்சிஸ் தற்போது உடல்நலக் குறைவால் சிகி ச்சை மற்றும் ஓய்வு பெற்று வருகிறார் என்பதும் குறிப்பி டத்தக்கது. (5-6)

# ன்னாள் ஜனாதிபதிக்கு ப்பட்டுள்ள தடை



அதன்பின்னர் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஆர்பனை சந்திக்க முடிவு செய்ததா கவும் தகவல் வெளியா னது.

ஹங்கேரி பிரதமர் ஆர் பன் ரஷ்ய ஜனாதிபதி புடினை பாராட்டியதோடு ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்கான உக்ரைன் அரசின் முயற்சியை ஆதரிக்க மறுத்தவர்.

இதனால் உக்ரைன் அரசு அவர் மீது அதிருப்தியில் உள் ளது.

இந்நிலையில், உக்ரைனில் இருந்து நேற்று முன்தினம் பெட்ரோ போரோஷென்கோ புறப் பட்டார்.

ஆனால் அவர் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

ஹங்கேரி பிரதமரை சந்தி க்க திட்டமிட்டதால் முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ போரோ ஷென்கோ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

பாராளுமன்ற அனுமதி இருந்தும் தன்னை திருப்பி அனுப்பியதாகவும், எல்லையில் தனக்கு நேர்ந்தது, ஒற்றுமை மீதான தாக்குதல் என்றும் பெட்ரோ போரோஷென்கோ தெரிவித் துள்ளார். (5-6)

# கலிபோர்னியாவில் வீட்டிற்கு ஒரு விமானம் வைத்திருக்கும் மக்கள்



(சாக்ரமெண்டோ)

அமெரிக்க நாட்டில் கலி போர்னியாவில் உள்ள கேம ரூன் ஏர்பார்க் என்ற கிரா மத்தில் மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்காக விமானத்தையே பயன்ப டுத்தி வருகிறார்கள்.

இந்தக் கிராமத்தில் வேலை க்கு செல்லவும் அலுவலகத் திற்கு செல்லவும் விமானத் தில்தான் பயணிக்கிறார்கள்.

விமானம் வைத்திருக்க விமான ஓட்டிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் விமானத்தை இயக் குவது குறித்த விவரங்களை தெரிந்தவர்கள் மட்டுமே விமானம் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

அவர்களை தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை. இந்த கேமரூன் ஏர்பார்க்கில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஓய்வுபெற்ற விமானிகளாக இருக் கிறார்கள். இவர்களுடன் மருத் துவர்கள், பொறியாளர்கள் உள் ளிட்ட பலதரப்பட்ட மக்களும் வசித்து வருகிறார்கள்.

இந்தக் கிராமம் 1963 ஆம் ஆண்டு கட்டமைக்கப் பட்டது. இங்கு மொத்தம் 124 வீடுகள் உள்ளன.

விமானங்களை தங்கள் வீடுகளுக்கு முன்பாக தரை யிறக்கவும் அருகில் உள்ள விமான நிலையத்திற்கு எளிதாக செல்லவும் 100 அடி அகலத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்போக்குவரத்தை அரசியல்வாதிகள் பயன்படுத்தும் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம்



(கொழும்பு)

பேருந்து, ரயில் என அரசியல்வாதிகள் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் புதிய அரசியல் கலாசாரத்தை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், தனிப்பட்ட பாதுகாப்புக்காக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எவரும் பொலிஸாரை பயன்படுத்தியதில்லை என கூறியுள்ளார்.

வேறு நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள் பேருந்து, ரயில், சைக்கிள் என மக்களுடன் இணைந்தே செல்வதாகவும் அந்த கலாசாரம் இங்கு வர வேண்டும்.

மேலும் வங்குரோத்து அடைந்த நாட்டை பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் துணிவு தேசிய மக்கள் சக்திக்கு உள்ளது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (5-6)

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகள் விரைவில் முடியும்

## நிமல் சிறிபால



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப்பணிகள் அடுத்த வருட நடுப்பகுதியில் நிறைவடையும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த டெர்மினலுக்காக மூன்று மெகா கப்பல்கள் ஒரே நேரத்தில் நிறுத்தப்படும் வகையில் 1,400 மீற்றர் நீளம் கொண்ட கப்பல் இறங்குதுறை அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த முனையத்தின் அபிவிருத்திக்காக மொத்தம் 585 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பிற்கு அதிகமான கப்பல்களை ஈர்க்கும் வகையிலும் ஆசியாவின் முக்கிய துறைமுகமாக இதனை மாற்றவும் விரும்புவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 360 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 800 |
| தக்காளி | 600 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | .150 |
| கோவா | 350 | 380 | 500 |
| கரட் | 350 | 450 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 |
| புடோல் | 300 | 220 | 300 |
| வாழைக்காய் | 200 | 240 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350-450 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 300 |
| பாகற்காய் | 650 | 500 | 200 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 140 |
| பயற்றங்காய் | 500 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | - | 600 |
| கறிமிளகாய் | 700 | 750 | 700 |
| முருங்கைக்காய் | 800 | - | 2000 |
| போஞ்சி | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 160 |
| தேசிக்காய் | 1000 | 800 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80-90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 550 |
| வெங்காயப்பூ | — | — | - |
| முள்ளங்கி | 140 | — | 300 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | — | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2980


கதிர்




திலக்சன்




மாதுளன்




வல்லவி




துஷி




நான்சி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணைக்கு இடையூறு விளைவித்தவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில், நீதிமன்ற விசாரணைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், நேற்று திங்கட்கிழமை நீதி மன்றத்திற்கு சாட்சியமளிப்பதற்காக சென்றிருந்த நிலையில் குறித்த நபர் நீதிமன்ற அமர்வில் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அதனை அடுத்து நபரை கைது செய்த, நீதிமன்ற பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சந்தேக நபரை, சட்டவைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி, பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிட்டார். (5-6-33)

## கிளிநொச்சியில் மக்கள் குடியிருப்புக்குள் காட்டுயானைகள் புகுந்து அட்டகாசம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு மக்கள், காட்டு யானைகளின் தொந்தரவுகள் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு 3 காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து வாழ்வாதாரத்துக்காக பயிரிடப்பட்டிருந்த மரவள்ளி, வாழை என்பன வற்றை முழுதாக அழித்துள்ளன. அத்துடன், யானையை துரத்துவதற்காக முற்பட்டவர்களையும் யானை அச்சுறுத்தியதில் இருவர் காயமடைந்துள்ளனர். (5-6-316)

## வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் ஆண்டுதோறும் பார்வையற்றவர்களின் பன்முகப் பணிகளுக்காக முன்னெடுத்து வருகின்ற உற்சவகால அதிஷ்டலாப சீட்டிழுப்பு செயற்றிட்ட வெற்றியாளர் தெரிவு நேற்று முன்தினம் ஊரெழு N.K மண்டபத்தில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினவிழாவில் நடைபெற்றது.

அத்தெரிவில் 1 ஆம் பரிசான குளிர்சாதனப் பெட்டியை பெறும் அதிஷ்டசாலிக்குரிய இலக்கமாக-39769, 2 ஆவது பரிசான மிக்சர் கிரைண்டர் பெறும் அதிஷ்டசாலிக்குரிய இலக்கமாக-23045, 3 ஆவது பரிசான மின்விசிறியை பெறும் அதிஷ்டசாலிக்குரிய இலக்கமாக-64570 தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வெற்றியாளர்கள் உங்கள் பரிசுகளை எதிர் வரும் 30.12.2023 இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையுள்ள நேரத்திற்குள் தங்களது அதிஷ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

## வணிகப் பொருட்களின் ஏற்றுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 2022 ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் ஒக்டோபர் மாதத்தில் இலங்கையின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதி 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஒக்டோபர் மாதத்தில் இலங்கையின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதி 298 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது. (5-6)

## தேசிய விளையாட்டுப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

தேசிய விளையாட்டுப் பேரவைக்கான புதிய உறுப்பினர்களை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பெயரிட்டுள்ளார்.

15 பேரை கொண்ட இந்த பேரவையின் தலைவராக மையா குணசேகர பெயரிடப்பட்டுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சிதத் வெத்தமுனி, பேராசிரியர் அர்ஜூன் டி சில்வா, சட்டத்தரணி பண்டுக கீர்த்திநந்த உள்ளிட்டவர்களும் அதில் அடங்குகின்றனர்.

முன்னதாக தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் அர்ஜூன ரணதுங்க செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## பண்பாட்டுப் பெருவிழாவும் காண்பியக்கூடக் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ். எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். காண்பியக்கூடக் கண்காட்சியானது நாளை மற்றும் நாளை மறுதினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (நி-5)

## கொழும்பில் 14 உணவகங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு - மஹரகம பொது சுகாதார பரிசோதகர்களினால் கொட்டாவ மற்றும் தலவத்துகுடா பகுதிகளிலுள்ள வீதி உணவகங்களில் அவசர சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட உணவுச்சோதனையின் போது, சுகாதாரமற்ற மற்றும் தரமற்ற உணவுகளை விற்பனை செய்த 14 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆறு உணவகங்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், தலவத்துகொட, கிம்புலாவலயில் உள்ள 35 வீதியோர உணவு விற்பனையாளர்கள் உட்பட 55 உணவகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இது தவிர, சமைத்த உணவைபச்சை உணவுடன் சேர்த்து வைப்பது, துருப்பிடிக்காத இரும்புத் தட்டுகளில் இறைச்சியை வறுத்தல் மற்றும் கொத்து, பிரைட் ரைஸ், நூடுல்ஸ் போன்ற மூல உணவுகள் சுற்றுச்சூழலுக்கு வெளிப்படையாக காட்சிப்படுத்தப்பட்டு தரமற்ற நிலையில் காணப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (5-6)

## விநாயகர் விரத இலச்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

இருபாலை கோப்பாய் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் விரத இலட்சார்ச்சனை பெரு விழாவும் பிள்ளையார் கதைப்படிப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கஜமுகசங்கார தினத்தன்று இலட்சார்ச்சனை பூர்த்தியும் மறுநாள் திங்கட்கிழமை பஞ்சமுக விநாயகர் வீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறவுள்ளன. (நி-5-6)

## பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட டெங்கு தடுப்பு உதவியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே குறித்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கையளித்துள்ளனர். (5-6)





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூஜை தினத்தை முன்னிட்டு நேற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை மற்றும் இந்து சமய கலாசார அலுவலக நாவலர் மணி மண்டபத்திலும் நாவலர் திருவுருவத்திற்கான மலர் மாலை அணிவித்து தீபாராதனை பூஜைகளும் இடம்பெற்றன.

(படங்கள்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கல்கியின்** பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

345





ஆகையினாலேதான் இப்போது கொஞ்சநாளாக இந்தத் தங்கசாலைக்குக் கட்டுக்காவல் அதிகமாயிருக்கிறது. இதன் அடியில் உள்ள பாதாளச் சிறைக்கு வருவோர் போவோரும் அதிகமாகி விட்டார்கள்!" என்று சொன்னார்.

"வருகிறவர்கள் உண்டு போகிறவர்கள் கூட உண்டா?" என்று குந்தவை கேட்டாள்.

"ஏன்? அதுவும் உண்டு. இன்று காலையில் ஒருவனைக் கொண்டு வந்தார்கள். ஒரு நாழிகைக்கு முன்னால் அவனைத் திரும்பக் கொண்டு போய்விட்டார்கள்!" என்று அந்த அதிகாரி கூறினார்.

"அது யாராயிருக்கும்?" என்று குந்தவைக்குச் சிறிது வியப்பாயிருந்தது.

தங்கசாலைக்குள் பற்பல வேலைகள் நடக்கும் இடங்களைப் பார்த்துவிட்டுப் பின்புறமாகச் சென்றார்கள். பின் சுவரில் ஒரு சிறிய வாசல் இருந்தது. அதைத் திறந்து கொண்டு சென்றார்கள். சென்ற இடத்தில் வெளிச்சம் குறைவாக இருந்தது. கூரை தாழ்வாக இருந்தது. நாலுபுறமிருந்தும் கேட்டவர்கள் ரோமம் சிலிர்க்கும் படியான உறுமல் சத்தம் கேட்டது. ஒரு சேவகன் தீவர்த்தி பிடித்துக் கொண்டு நின்றான். அதன் வெளிச்சத்தில் நாலு புறமும் உற்றுப் பார்த்தபோது பல கூண்டுகளும் அவற்றுக்குள்ளே அடைபட்ட புலிகளும் இருப்பது தெரிந்தது. அவற்றில் சில வேங்கைப் புலிகள் சில சிறுத்தைப் புலிகள். சில படுத்திருந்தன் சில கூண்டுக்குள் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தன. அவற்றின் கண்கள் அந்த இடத்தின் மங்கலான வெளிச்சத்தில் நெருப்புத் தணல்களைப் போல் ஒளிர்ந்தன.

குந்தவை வானதியின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "அடியே! பயமாயிருக்கிறதா? இங்கே மூர்ச்சை போட்டு விழுந்து வைக்காதே!" என்றாள்.

வானதி இலேசாகச் சிரித்துவிட்டு, "புலியைக் கண்டு என்ன பயம், அக்கா! புலி நம்முடைய குலத்தின் காவலன் அல்லவா?" என்றாள்.

"சில சமயம் காவலர்களே எதிரிகளுடன் சேர்த்து விடுவார்கள் அல்லவா? அப்போது அபாயம் அதிகம் ஆயிற்றே?"

"இல்லை. அக்கா! மனிதக் காவலர்கள் அப்படி ஒருவேளை துரோகம் செய்யலாம். இந்தப் புலிகள் அப்படிச் செய்ய மாட்டா!"

"சொல்வதற்கில்லை இந்தப் புலிகள் எத்தனையோ இராஜாங்கத் துரோகிகளைச் சாப்பிட்டிருக்கின்றன. அவர்களுடைய இரத்தம் இந்தப் புலிகள் உடம்பில் கலந்திருக்கும் அல்லவா?"

"பயமேயில்லை" என்று சற்றுமுன் கூறிய வானதியின் உடம்பு இப்போது சிறிது நடுங்கத்தான் செய்தது.

"அக்கா! என்ன சொல்கிறீர்கள் உயிருள்ள மனிதர்களை இந்தப் புலிகளுக்கு இரையாகக் கொடுப்பார்களா, என்ன?" என்று கேட்டாள்.

"அப்படிச் செய்ய மாட்டார்கள். இந்தத் தங்கசாலைக்கு அடியில் பாதாளச் சிறை இருக்கிறது என்று சொன்னேன் அல்லவா? அதற்குள் போவதற்கும் வருவதற்கும் ஒரேவழிதான். அந்த வழி இந்தப் புலிமண்டபத்தில் இருக்கிறது. சிறைக்குள்ளிருந்து யாராவது தப்பித்து வரமுயன்றால் இந்த மண்டபத்துக்குள்ளேதான் வரவேண்டும். அப்போது புலிகளுக்கு இரையாவார்கள்!" "சிவ சிவா! என்ன கொடூரம்?"

"இராஜாங்கம் என்றால் அப்படித்தான்! கருணையும் உண்டு கொடூரமும் உண்டு. வானதி! ஒரு சமயத்தில் என்னையே இந்தப் பாதாளச் சிறையில் அடைத்தாலும் அடைத்து விடுவார்கள். சின்னப் பழுவேட்டரையர் இன்றைக்கு என்னுடன் பேசியதை நீ கேட்டிருந்தால்"

"நன்றாயிருக்கிறது அக்கா! தங்களைப் பிடித்துச் சிறையிலடைக்கும் வல்லமையுள்ளவர்கள் ஈரேழு பதினாலு உலகத்திலும் இல்லை. அப்படி யாராவது செய்ய முயன்றால் பூமி பிளந்து இந்தத் தஞ்சை நகரத்தையே விழுங்கிவிடாதா? அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வெயிலும் நிழலும்

(நேற்றைய தொடர்ச்சி)

உடனே மந்திரியும் அக்பரின் விருப்பப்படி ராஜ்யமெங்கும் தண்டோராப் போட்டு அறிவித்தார்.

அக்பரின் அறிக்கையைக் கேட்ட பொதுமக்கள் ஆச்சரியமுற்றனர். "சக்கரவர்த்திக்கு என்ன இப்படி ஒரு வினோதமான ஆசை? இந்த சவாலை யார்தான் ஏற்பார்கள்?" என்று தங்களுக்குள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள். தலைநகருக்கு அருகேயிருந்த ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்த ஒரு பரம ஏழை இந்த செய்தியைக் கேட்டு பரபரப்படைந்தான்.

வாழ்க்கையில் பொற்காசுகளையே பார்த்திராத அவன் ஒரே சமயத்தில் நூறு பொற்காசுகள் கிடைக்கும் என்ற அறிக்கை அவன் ஆசையைத் தூண்டியது. அந்தத் தொகை மட்டும் கிடைத்தால், அவனுடைய ஏழைமை பரிபூரணமாக விலகிவி டும்.

அதைப்பற்றி அவன்



தன் மனைவியிடம் விவாதித்த போது, அவள், "நமக்குப் பக்கத்து வீட்டில் சில நாள்களுக்கு முன் குடி வந்துஇருக்கும் வீரேந்திரனைக் கேட்டுப் பாருங்களேன்! அவன் அதிபுத்திசாலியாகக் காணப்படுகிறான். அவன் நிச்சயம் இதற்கு ஏதாவது ஒருவழி கூறுவான்" என்றாள்.

அவ்வாறே அவன் தன்னுடையப் ப்க்கத்து வீட்டுக்காரனான வீரேந்திரனை யோசனை கேட்டவுடன் அவன் உடனே, "அது ஒன்றும் கஷ்டம் இல்லையே! நீ ஒரு நாற்காலியை அல்லது சோபாவைத் தலைக்கு மேல் சுமந்து போ! உன் மேல் வெயில்படாது!" என்று வீரேந்திரன் கூறினான்.

"ஆகா! என்ன அருமையான யோசனை? இது ஏன் யாருக்குமே தோன்றவில்லை!" என்று மகிழ்ச்சியுடன் கூவிய அந்த ஏழை, "நான் நீ கூறியவாறு நாளைக்கே தலைநகர் ஆக்ராவிற்குச் செல்லப் போகிறேன்" என்றான். அவ்வாறே மறுநாள் கிளம்பிய அவன் தலைக்குமேல் ஒரு சிறிய சோபாவைத் தூக்கிக் கொண்டு கால்நடையாகவே அக்பரின் தர்பாரை அடைந்தான்.

"பிரபு! குடை இல்லாமலே கொளுத்தும் வெயிலில் என் கிராமத்தில் இருந்து இங்கு கால்நடையாக வந்துதிருக்கிறேன்!" என்று பரபரப்புடன் அறிவித்தான். "சபாஷ்! யாருக்குமே தோன்றாத இந்த யோசனை உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்டார்.

"பிரபு! உண்மையில் எனக்கு இந்த யோசனையை சொல்லிக் கொடுத்தது என் பக்கத்து வீட்டுக்கார வீரேந்திரன்!" என்றான் ஏழை! அது பீர்பல் தான் என்றும் யூகித்துக் கொண்ட அக்பர் தன் திட்டம் பலித்ததையெண்ணி மிக மகிழ்ச்சியுற்றார். நான் அறிவித்தபடியே உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். அந்தப் பணத்தை உன் கிராமத்திற்கு பத்திரமாக எடுத்துச் செல்ல உன்னுடன் இரு காவலர்களையும் அனுப்புகிறேன்.

நீ உன் வீட்டை அடைந்ததும், அந்த புத்திசாலி வீரேந்திரனை காவலர்களிடம் ஒப்படைத்து விடு!" என்றார். அவ் வாறே மிக்க மகிழ்ச் சியுடன் அந்த ஏழை இருவீரர்களின் துணையுடன் தன் வீட்டை அடைந்தான். அவன் அடையாளம் காட்டிய வீரேந்திரனைக் காவலர்கள் தங்களுடன் அழைத்துக் கொண்டு ஆக்ரா திரும்பினர்.

தர்பாரில் நுழைந்த வீரேந்திரன் தன் முகத்தை ஒரு பையினால் மூடிக் கொண்டு வந்தான். "வீரேந்திரா! உன் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய்? பையை அகற்று!" என்றார் அக்பர். "பிரபு! நான் வீரேந்திரன் இல்லை! நான்தான் பீர்பல்! உங்கள் முகத்தில் இனி நான் விழிக்கக் கூடாது என்ற உங்கள் கட்டளைப்படியே நான் எனது முகத்தை மூடிக்கொண்டு வந்து உள்ளேன்!" என்றான்.

"பீர்பல்! உன் முகத்தை நான் இப்போதே பார்க்க விரும்புகிறேன்! இதுவும் என் கட்டளையே!" என்று கூறிய அக்பர் தானே முன்சென்று பையை அகற்றி விட்டு, பீர்பலை மிகுந்தப் பிரியத்துடன் கட்டித் தழுவிக் கொண்டார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நல்ல செயல்கள் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.
>
> *– எமர்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இரப்பவர்களுக்கு மீனைக் கொடுக்காதீர்கள் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுங்கள்

சீனாவின் அபரிதமான வளர்ச்சி கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது. உலகில் அதிகூடிய சனத்தொகையைக் கொண்ட சீனா தனது நாட்டு மக்களை எவ்வாறு வழிப்படுத்துகிறது என்பதற்கு அந்த நாட்டுப் பழமொழிகளே தக்க சான்று.

ஆம், இரப்பவர்களுக்கு மீனைக் கொடுக்காதீர்கள். மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடுங்கள் என்பது சீனப் பழமொழி.

இங்குதான் ஓர் உண்மை உணர்த்தப்படுகிறது. அதாவது இரப்பவர்களுக்கு நீ மீனைக் கொடுப்பாயாக இருந்தால், அவர்கள் தொடர்ந்தும் இரந்து கொண்டே இருப்பார்கள்.

எனவே நீ அவர்களுக்கு மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால் – மீனைப் பிடிப்பதற்கு தேவையான உபகரணங்களை வழங்கினால், அவர்கள் அதில் தம்மை ஈடுபடுத்தி முயற்சியாளர்களாக தம்மை மாற்றிக் கொள்வர்.

இவ்வாறு அவர்கள் முயற்சியாளர்களாக மாறும்போது அதனால் அவர்களுடைய வீட்டுக்கு வருமானம் கிடைப்பதுடன் சமூகத்திலும் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ முடியும்.

அதுதவிர, யாசிப்பதற்கு இடம் கொடுக்காமல் சம்பந்தப்பட்டவர்களை ஒரு தொழில் முயற்சிக்கு தயார்படுத்தி விடும்போது, அவர்களால் அந்த நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரித்து தேசிய வருமானம் அதிகரிக்கும்.

எனவே மேற்குறித்த சீனப் பழமொழி பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

பொதுவில் வறுமைப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கும்போது, அவர்கள் அதனை மீண்டும் மீண்டும் எதிர்பார்ப்பார்கள்.

இந்த எதிர்பார்ப்பு அவர்களை சோம்பேறிகளாக ஆக்குவதுடன் தமக்கு உரிய உணவுப் பொருட்கள் கிடைக்காதபோது, அவர்கள் சமூகத்தை தூற்ற முற்படுவர்.

இங்குதான் நன்றி என்பது கெட்டும் போகிறது.

எனவே உலர் உணவுப் பொருட்களைத் தொடர்ந்தும் வழங்குவதை விடுத்து சம்பந்தப்பட்டவர்கள் பொருத்தமான சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடக்கூடியதான ஏற்பாடுகளை நாம் செய்யும்போது எதிர்காலத்தில் அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கக் கூடியதான நிலைமை ஏற்படுவதுடன் மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்ற தன்மையும் அடியோடு இல்லாமல் போகும்.

எனவே மற்றவர்களிடம் இருந்து உணவுப் பொருட்களைப் பெற்று சீவியம் நடத்துகின்ற நிலைமையை முற்றுமுழுதாக இல்லாமல் செய்து, உழைத்து வாழுகின்ற மனப் பாங்கையும் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும் நம் புலம்பெயர் உறவுகளும் பரோபகாரிகளும் முன்வர வேண்டும்.

இல்லையேல் பணம் படைத்தவர்கள் அரிசி கொடுக்க அதனை இல்லாதவர்கள் தள்ளுமுள்ளுப்பட்டு பெற்றுக் கொள்வதும் அவற்றைக் காட்சிப்படுத்துவமான வேதனைக்குரிய சம்பவங்கள் நம் மண்ணில் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# காலநிலை மாற்றத்துக்கு எதிராக

## இலங்கை அர்ப்பணிப்புடன் போராடுகின்றது

## அமெரிக்கப் பிரதிநிதியிடம் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

காலநிலை மாற்றத்துக்கு எதிராக இலங்கை அர்ப்பணிப்புடன் போராடுகின்றது என அமெரிக்கப் பிரதிநிதியிடம் ஜனாதிபதிரணில் எடுத்துரைத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் காலநிலை மாற்றம் தொடர்பான விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

அதன்போது நவீன முன்னெடுப்புகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் நிறுவப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் காலநிலை சவால்களுக்கு நிலையான தீர்வுகளை அமுல்படுத்த இலங்கை தயாரித்துள்ள விரிவான திட்டம் குறித்தும் இங்கு ஜனாதிபதி விளக்கினார்.

காலநிலை மாற்றத்தை திறம்படக் கையாள்வதற்குத் தேவையான நிதி திரட்டும் முக்கியமான பிரச்சினை குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், காலநிலை தொடர்பான திட்டங்களுக்கு நிதி மூலங்களை மேம்படுத்துவதில் தனியார் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் அதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை நேரில் காண விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜோன் கெரிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். (ம-7)

# எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியை தோற்கடிக்க ஆதரவு தரமாட்டோம்

## பிரசன்ன ரணதுங்க எம்.பி தெரிவிப்பு

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம் என ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த பெருந்தலைவராகவே ரணில் விக்கிரமசிங்கவை ஆளும்கட்சியினர் பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுகின்றனர் என்றும் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்களது இந்த சதித் திட்டம் வெற்றியளிக்காது என்றும் வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடித்து அரசை தவிக்க விடும் அவர்களது சதி முறையிற்சிக்கு மொட்டுக் கட்சி இடமளிக்காது என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பருத்தித்துறை நீதிமன்றில் குழப்பம் விளைவித்த

## பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில், நீதிமன்ற விசாரணைக்கு இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் நில்லயத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிப்பதற்காக சென்றிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபர் நீதிமன்ற அமர்வில் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அதனை அடுத்து நபரை கைது செய்த, நீதிமன்ற பொலிஸார் பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேகநபரை இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் சந்தேகநபரை, சட்டவைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி, பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிட்டார்.

அதேவேளை குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மது போதையிலேயே குழப்பத்தை ஏற்படுத்தினார் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7,33,60)

## களனிப் பல்கலைக்கழகத்தை

# மறு அறிவித்தல் வரை மூடத் தீர்மானம்

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களை மறு அறிவித்தல் வரை மூடத் தீர்மானித்துள்ளதாக களனிப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

அதன்படி, மருத்துவ பீட விடுதிகள் தவிர்ந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் மூடப்பட்டிருக்கும். அதேவேளை அனைத்து மாணவர்களும் தத்தமது விடுதிகளை விட்டு இன்று காலை 8.00 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரசி ஆலை, மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அன்றாடம் நிகழும் கசப்பான நிதர்சனம். தாமதமாகிவிடும் முன் இப்போதும், எப்போதும், என்றென்றும் செயற்படுவோம்!!!"

16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அதனால் ஊழல் ஒழிப்பு என்ற சொற்பதத்திற்கு பொருத்தமான ஆணைக்குழுவொன்று விரைவில் உருவாகும். அதனை தடுக்க முயற்சிப்பவர்களை மக்கள் புறக்கணிப்பர். திருடர்களை பிடிக்கவில்லை.

நாம் வந்திருந்தால் ஊழலை ஒழித்துக்கட்டியிருப்போம் என்ற போராட்டங்களின் கோசங்களின் மீது மாத்திரம் தங்கியிருக்காமல் மாற்றத்தை ஏற்படுத்த அரச தலைவர்களையும் அதிகாரிகளையும் வலியுறுத்த வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

அதேபோல் அரச நிறுவனங்களில் காணப்படும் ஊழல் செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரம், கட்டளைகளை விதிக்க கூடிய அதிகாரங்களும் ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. அரச துறைக்குள் மோசடியை ஒழிப்பதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டம் பெரும் பலமாக அமைந்திருக்கும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

இலங்கையை பொறுத்தவரை இலஞ்சமானது 1883 ஆம் ஆண்டே தண்டனைச் சட்டக்கோவையில் (Penal Code) தண்டனைக்குரிய குற்றம் ஒன்றாக வரையறுக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் காலத்துக்கு காலம் கொண்டுவரப்பட்ட சட்டங்களின் மூலம் இக்குற்றத்துக்கு எதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 1994 ஆம் ஆண்டு இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (Commission to Investigate Allegations of Bribery or Corruption) ஒன்று தாபிக்கப்பட்டதே முக்கிய மைல் கல்லாகும்.

**ஊழலை ஒழிப்பதற்கான சட்டங்கள்**

1883 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தண்டனை சட்டக்கோவை கட்டளை சட்டம்

ஒரு அரச ஊழியர் ஒருவர் இலஞ்சத்தை ஊக்குவிப்பாக மற்றும் கைம்மாறாக பெறுதல் (நீதித்துறை அலுவலர் உள்ளடங்கலாக) (பாகம் 9 பிரிவு 158,159,160 மற்றும் 161) சட்டவிரோத செய்கையாக கருதப்படும்.

அரச ஊழியர் ஒருவர் இலஞ்சம் பரிந்து கோரல், ஏற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக் கொள்ளல். சட்டவிரோத செய்கை யானதுடன் பிரிவு ஓ.ஐ.இ பிரிவுகள் 210, 211, மற்றும் 212 கீழ் தண்டனை வழங்கப்படும்.

இலஞ்சம் கொடுப்பவர் குற்றம் செய்ய உதவுபவராக கருதப்படுவார். சட்டவிரோத செயல்களுக்கு உதவுதல் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கப்படும். யாராவது ஒரு நபர் அரச ஊழியர் ஒருவரின் செல்வாக்கை பெற இலஞ்சத்தை ஏற்றல் அல்லது பெற்றுக்கொண்டால் அவரும் தண்டிக்கப்படுவார்.

சட்டமானது அவனது நிர்வாக அதிகார செயற்பாடுகளுக்குள் இல்லாமலிருக்கும் போது ஒரு அரச ஊழியருக்கு இலஞ்சத்தை எடுப்பதற்கு அதிகாரபூர்வமான தடையுமில்லை. (சொய்ஸா எதிர் சுபவிர வழக்கு 1941).

அதே போல லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர் சம்பந்தப்பட்ட செயலைச் செய்ய வேண்டிய கடமை இல்லாதபோது, அவர் எந்த சாதகமான பதவியை அனுபவித்தாலும் கொடுப்பவரும் தூண்டுதலுக்குப் பொறுப்பேற்க மாட்டார். (தென்னக்கோன் எதிர் திசாநாயக்க வழக்கு -1948)

அரசு ஊழியர் என்பது நீதித்துறை அதிகாரிகள் உட்பட அனைத்து பொது அதிகாரிகளையும் தழுவியது. நாட்டின் தலைவரோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, மக்கள் பிரதிநிதிகளோ லஞ்சம் வாங்குவதற்கு குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்பாக்கப்படவில்லை.

குற்றங்கள் காவற்றுறையினரால் விசாரிக்கப்பட்டு மற்ற குற்றங்களைப் போலவே சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்படும். இச் சட்டம் இதைவிட மேலும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது.

**1954 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலஞ்ச சட்டம்**

1954 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலஞ்ச சட்டமானது சட்ட இடை வெளியை நிரப்புவதற்கான இலஞ்சம் மீதான புதிய சட்டத்தை வழிவகுத்தது. இந்த மாற்றமானது இலஞ்சம் தொடர்பான சட்டங்களின் போதாமை மற்றும் விசாரணைக் கமிஷன்களின் பரிந்துரைகளை அங்கீகரிப்பதற்காக நீதித்துறை விரக்தியின் பிரதிபலிப்பாக இந்தச் சட்ட மாற்றம் வந்தது. இந்த சட்டம் பாவனையிலிருந்த குற்றவியல் சட்ட விதிகளை ரத்து செய்யவில்லை. குற்றவியல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அனைத்து லஞ்சக் குற்றங்களும் இந்தச் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த புதிய சட்டத்திற்கு மூக்கிப்பத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் சரியான நேரத்தில் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்பட்டது..

சட்டமானது 9 தடவைகள் திருத்தப்பட்டது. 1956 இன் 17ஆம் இலக்கம், 1958 இன் 40ஆம் இலக்கம், 1965 இன் 2ஆம் மற்றும் 18ஆம் இலக்கம், 1973இன் 8ஆம் இலக்கம்,1974 இன் 38 ஆம் இலக்கம், 1976 இன் 11ஆம் இலக்கம், 1980இன் 9ஆம் இலக்கம் மற்றும் 1994இன் 20ஆம் இலக்க சட்டங்கள் பாரிய மாற்றங்களை கொண்டு வந்தன. பிரத்தியேக சட்டவிரோத செய்கைக்கான இலஞ்ச புலனாய்வு மற்றும் தீர்மானத்துக்கான பிரத்தியேக அதிகாரம் மற்றும் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலஞ்ச சட்டத்தின் கீழ் 1958 ஆம் ஆண்டின் திருத்தமானது இலஞ்ச ஆணையாளர் அலுவலகம், இலஞ்ச ஆணையாளர்கள் திணைக்களம் மற்றும் தனியான அரச திணைக்களம் என்பவற்றை சட்ட விரோத செயல்களை விசாரணை செய்வதற்கு அறிமுகப்படுத்தி பாரிய மாற்றத்தை கொண்டு வந்தது. இந்த திணைக்களத்தால் சட்டமா அதிபருக்கு ஆரம்ப விடயங்களை புலனாய்வு செய்வதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டது.

**1994 இன் 19ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றங்களைவிசாரிப்பதற்கான ஆணைக் குழுச்சட்டம்**

1994 இல், அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்கும் ஆணைக்குழு சட்டம் இல 19, 1994 (Commission to investigate Allegation of Bribery and Corruption Commission Act No. 19 of 1994) முக்கியமான ஒன்றாகும். இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆணைக்குழு ஆனது இலஞ்ச ஊழல் செயற்பாடுகட்கெதிரான விசாரணைகளை நடாத்த தன்னார்வ தகவலின் பெயரிலோ அல்லது முறைப்பாட்டின் அடிப்படையிலோ அதிகாரம் கொண்டது.

அத்துடன் நீதிமன்ற வழக்காடல் செயற்பாடுகளிலும் இவ்வாணைக்குழு ஒரு தாப்பாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் ஆணைக் குழுவின் வேண்டுதல்களை நிராகரிப்பது நீதிமன்ற அவமதிப்பிற்கு ஒப்பான ஓர் குற்றமாக கருதப்படும்.

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இவ்வாணைக்குழு, எமது நாட்டின் இலஞ்ச சட்டம் மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கான சட்டம் ஆகியவற்றின் கீழ் புரியப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு அதிகாரம் ளிக்கப்பட்ட நிரந்தர நிறுவனமாகும்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் உட்பட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இவ்வாணைக்குழு தனது பணிகளை 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வருகின்றது.

அரச ஊழியர் ஒருவர் தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, நிறைவேற்றுவதிலிருந்து விலகியிருப்பதற்காக, கடமையை விரைவாக செய்வதற்காக, தாமதப்படுத்துவதற்காக, இடையூறு செய்வதற்காக, ஒரு வேலையைச் செய்யும் போது ஆள் ஒருவருக்கு உதவி செய்வதற்காக, இடையூறு விளைவிப்பதற்காக, பக்கச் சார்பாக நடந்து கொள்வதற்காக "அவா நிறைவொன்றை" (Gratification) அதாவது நமது பாஷையில் இலஞ்சத்தைப் பெற்றுக் கொள்தல் இலஞ்ச சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

அமைச்சரவை அமைச்சர்கள் தொட்டு ஒரு சாதாரண அலுவலக உதவியாளர் வரை இக்குற்றச்சாட்டுக்கு உரித்தாக்கப்பட்டு ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட முடியும்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் குறித்த அதிகாரி அல்லது ஊழியர் இலஞ்சமாக கேட்கும் பணத்தை அல்லது பொருளை அல்லது பணத்தால் மதிப்பிட முடியாத ஏதேனும் நன்மையை தன்னிடம் அல்லாமல் இன்னொருவரிடம், அதாவது இடைத்தரகர் ஒருவரிடம், கொடுக்குமாறு கூறி, அங்ஙனம் அந்த இடைத்தரகர் அதனைப் பெறும்போது அல்லது பெற்றுக்கொள்ள சம்மதிக்கும் போது கையும் களவுமாக பிடிபட்டாலும் அந்த குறித்த அதிகாரி அல்லது ஊழியர் இலஞ்சம் வாங்கியதாகவே சட்டம் அனுமானித்து அவருக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கும்.

இலஞ்ச சட்டத்தின் கீழ் இலஞ்சம் வாங்குவதைப் போல் அதனைக் கொடுப்பதும் சமமான தண்டனைக்குரிய குற்றமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

யன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், செப்ரெம்பர் 2023இல் பதிவு செய்யப்பட்ட மதிப்புடன் ஒப்பிடும் போது இது 13.13% குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆடை, ரப்பர், ரப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்களில் ஏற்றுமதி தேவை குறைவதால் சரக்கு ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## 26 நாட்களே...

இதில் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த தாசன் அஸ்வின் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தை பிறந்தது முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ கண்காணிப்பில் இருந்து வந்த நிலையில் கடந்த 24ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தபோது தாய்ப்பால் புரைக்கேறி வாந்தி எடுத்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணையினை மேற்கொண்டு பிரேதப் பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

குழந்தையின் சுவாசக்குழாயில் பால் இருந்தமையினால் குழந்தை உயிரிழந்திருப்பதாக பிரேதப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## அடையாள...

19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கடந்த வழக்கு தவணையில், நேற்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு திகதியிடப்பட்டது.

அந்நிலையில், வழக்கின் பிரதான சாட்சியமான, உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மன்றுக்கு சமுகமளிக்காத நிலையில், அடையாள அணிவகுப்புக்கு 08ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.

அதன்போது சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், அடையாள அணிவகுப்பு சந்தேகநபர்களை முற்படுத்தும்போது, சந்தேகநபர்களுடன் முற்படுத்தப்படும் ஏனைய நபர்கள் சந்தேகநபர்களின் தோற்றத்தை ஒத்தவர்களாகவும், பொலிஸ் உத்தியோகஸ்தர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். அதனை மன்று ஏற்றுக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து 08ஆம் திகதிக்கு அடையாள அணிவகுப்புக்கு திகதியிட்ட மன்று, இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணிக்கு மரண விசாரணைக்காக திகதியிட்டுள்ளது. (ம-7,33)

## யாழில்..

செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில்,

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதத்தில் 110 நோயாளிகளும், ஒக்ரோபர் மாதத்தில் 118 நோயாளிகளும் நவம்பர் மாதத்தில் 427 நோயாளிகளும் டிசம்பர் மாதத்தின் முதல் மூன்று நாட்களில் 82 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் கூடிய நோயாளர்கள் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் அதிகூடிய நோயாளிகள் இனங்காணப்பட்ட நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செப்ரெம்பர் மாதத்தில் 19 நோயாளர்களும் ஒக்ரோபர் மாதத்தில் 23 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 108 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தின் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 34 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகளவான நோயாளர்கள் கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி மற்றும் வண்ணார்பண்ணை ஆகிய பிரதேசங்களில் இருந்து இனங்காணப்பட்டுள்ளனர் என்றுள்ளது. (ம-7,33)

## தெல்லிப்பழையில்...

யில் பயணித்தபோது ஹயஸ் ரகவானில் வந்த வாள்வெட்டு குழுவினர் இளைஞர் ஒருவர் மீது சரமாரியாக வாள் வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு மருதனார்மடம் நோக்கி தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

பொலிஸ் நிலையம் முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த வாள் வெட்டுக் குழுவினரை துரத்திச்சென்ற போதும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்போது வானை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## வட...

யில் இருக்கின்றார்கள்.

சந்தேகநபர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களைமேற்கொள்கின்றார்கள். தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் பொலிஸாரின் இந்த அத்துமீறல் செயல்கள் தலை விரித்தாடுகின்றன.

இதனால் அங்கு அப்பாவி மக்களின் உயிர்களும் பறிக்கப்படுகின்றன.

பொலிஸ்மா அதிபர் விவகாரத்தைக் கையிலெடுத்து அரசியல் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸாரின் இந்த அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." என்றார். (ம-7)

## 35 இலங்கையர்கள் நாடு கடத்தல்

இலங்கைக்கு வர முடியாத நிலையில், குவைத்தில் நீண்டகாலமாக விசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் நேற்றுக் காலை நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் நேற்றுக் காலை 06.35 மணியளவில் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானமான UL-230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு ஆண் வீட்டுப் பணியாளரும் 34 பெண் வீட்டுப் பணியாளர்களும் அடங்குவர். (ம-7)

## வழிப்பறிக்...

இடம்பெறுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 144
B 9 6 8 6 6 0 B

தன நிதானய
திகதி -2023.12.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1348
P 03 08 13 47 P
Double Chance 28241

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3560
சீட்டிழுப்பு திகதி 04.12.2023
V 24 28 51 70
V 16905
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.04
சீட்டிழுப்பு இலக்கம் 0627
மகரம் 48 49 50 51 மகரம்
18270 08

மஹஜன சம்பத
திகதி 2023/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 5318
J 7 5 6 5 5 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1666
V 11 06 11 62 64
42468

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
திகதி 04.12.2023 வெற்றி வாரம் 026 வர்ணம் ஊதா
R 9 9 1 4 1 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,003,731.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2292 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.04 தினம் திங்கட்கிழமை
23 38 65 70 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,637,444/-

சனிதா
திகதி 2023.12.04 வெற்றி வாரம் 4453
06 21 23 52 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,809,904.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4004 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.04 தினம் திங்கட்கிழமை
09 19 31 49 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,601,684/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 25 31 48 52 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 473,133,674.20
1468 பச்சை 2023.12.04 திங்கள்
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47

ஜயோதா Jayoda
திகதி 2023.12.04 வெற்றி வாரம் 1979 வர்ணம் செம்மஞ்சள்
18 31 32 36 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,779,880.00

அட கோடீபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2118
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.12.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,680,016/-
23 53 54 60 I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தோண்டிய 9 பேர் புத்தளத்தில் கைது

புத்தளம் - கற்பிட்டி தேதாவாடிய பிரதான வீதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 9 பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் உட்பட அங்கு பணிபுரியும் ஊழியர்கள் உள்ளிட்ட 9 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மண்வெட்டி, கோடரி உள்ளிட்ட பொருட்களும், பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இதன்போது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தும்மலசூரிய மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கணவனை வெட்டி கொன்ற மனைவி

தான் பெற்ற மகளையே நிர்வாண படங்கள் எடுத்து அவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்து பணம் சம்பாதிக்க முயன்ற கணவனை மனைவி வெட்டிக் கொன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெல்லவ பொலிஸ் பிரிவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வைத்தியசாலை உதவியாளராக பணியாற்றிய 37 வயதுடைய கணவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவராவார்.

வீட்டின் குளியலறையில் மறைந்திருந்த கணவன் மீது மனைவி, மிளகாய்ப் பொடியை வீசியதாகவும், மிளகாய்ப் பொடி தாக்குதலுக்கு உள்ளான அவர், வெளியே வந்த போது, மனைவி வெட்டிக் கொன்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## பாராளுமன்...

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ச சகோதரர்களும் அவரது சகாக்களுமே காரணம் என இலங்கை உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ள நிலையில், சந்திரிகா குமாரதுங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்தவர்கள் ராஜபக்சக்களே. இதனை உயர்நீதிமன்றமும் அண்மையில் வழங்கிய தீர்ப்பில் உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, இப்படிப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரும், அவர்களின் சகாக்களும் மீண்டும் பாராளுமன்றம் வர நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ராஜபக்ச கும்பலுக்கு நாட்டு மக்கள் உரிய பாடம் புகட்ட வேண்டும். அவர்களைக் கூண்டோடு தோற்கடிக்க வேண்டும். அவர்களின் அரசியல் அத்தியாயம் இத்துடன் முடிவுக்கு வர வேண்டும்" என்றார். (ம-7)

# பாம்பு தீண்டிய குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒல்லிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

பிள்ளையார் கோயில் வீதி, பட்டிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தவராசா திலகராஸ் (வயது 39) என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது பிள்ளையின் பிறந்தநாளுக்காக உணவுப்பொருட்கள் வாங்கிக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வீதியின் அருகில் நின்ற பாம்பு தீண்டியதில் அவர் மயக்கமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும், அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாங்குளம், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18088)

076 825 7716 (ஆகாஸ்)

DCM - யாழ்நகர்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

A/L 2025

கலை, வர்த்தகம் புதிய பிரிவு

ஆரம்பம் - 06.12.2023 மாலை 3.00 மணி (C-7803)

077 778 9815 நிர்வாகம்

தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு Sales Rep தேவை. அனுபவமுள்ளவர் மற்றும் Moter Bike உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (18103)

T.P - 077 171 8777

Email - admin@mbilk.com

சதாபொன்ஸ் கல்வி நிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)

மாலிசந்தி, அல்வாய்

A/L வர்த்தகப்பிரிவு 2025

புதிய பிரிவுகள்

ஆரம்பம் - 01 / 12 / 2023

கணக்கீடு - திரு. V.பகீரதன்

வணிகக்கல்வி - திரு. T.லோகேஸ்

பொருளியல் - திரு. V.ஜெகதீஸ் (C-7805)

077 309 5176, 021 226 3206, 076 126 0105

சதாபொன்ஸ் கல்வி நிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)

மாலிசந்தி, அல்வாய்

O/L மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம் - 07.12.2023

வியாழக்கிழமை

காலை - 8.00 மணி (C-7807)

077 309 5176, 021 226 3206, 076 126 0105

O/L DAY CLASS

துரித மீட்டல் வகுப்புக்கள்

பிரிவு - 1 ஆரம்பம்

06.12.2023

புதன்கிழமை காலை 8.00

- யாழ். நகரின் புகழ்பூத்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
- வாரத்தில் 5 நாட்கள் வகுப்பு
- புதிய அனுமதிகள் இன்றுமுதல்... (18098)

புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளிற்கு :

077 459 8440

காணி விற்பனைக்கு

A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோயிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (C-7798)

077 948 4582

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள் (C-7804)

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30000/-

பயிற்சியின்போது - 25000/-

கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

0777-068-777

v2vacancies@gmail.com

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

0777 554 528 (18106)

CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7804)

0777-068-777

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை (18093)

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457


## அறிவித்தல்

சுன்னாகம் முத்துக்கிருஸ்ணர் ஒழுங்கையைச் சேர்ந்த தர்மலிங்கம் நந்தகுமாரன் ஆகிய நான் புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள அம்பலசிட்டி என எனது உறுதியிலும், தங்கப்பிள்ளை விக்னராசாவினால் அம்பனையிட்டி என அழைக்கப்படுவதுமான J/207 புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்டதுமான ஆதனத்தில் எனக்கு 2 பரப்பும் 3 குழியும், மேலும் சின்னத்துரை அருந்தவராசாவிற்கும் பெண் ரஞ்சிதமலருக்கும் 4 பரப்பும் 5 குழியும் சொந்தமானது என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன். குறித்த ஆதனத்தை அதற்கு உரிமை இல்லாதவர்கள் மோசடியாக விற்க முயற்சிப்பதனால் இவ் அறிவித்தல் விடுக்கப்படுகிறது. இவ் ஆதனம் தொடர்பில் காணி/1226/23 எனும் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதையும் அறியத்தருகிறேன்.

வரைபு :

சட்டத்தரணி கலாநிதி K.குருபரன் — த.நந்தகுமாரன்

(18101)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org